சார்பு நீதிமன்றம், அவிநாசி

**OS. No.** 134/2018

**11.07.2022**

**வா.சா.1 - ரேவதி**

குறுக்கு விசாரணை

வழக்கு சொத்திலிருந்த 70 கி.மீ. தள்ளி குடியிருக்கிறேன் என்றால் சரிதான். எனக்கு திருமணமாகி 32 ஆண்டுகளாகிறது. வழக்கு சொத்தை நான் விவசாயம் செய்து அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல நான் அனுபவித்துதான் வருகிறேன். இன்றைய தேதி வரை நான் வழக்கு சொத்திற்கு கந்தாய இரசீது செலுத்தவில்லை என்றால் சரியல்ல. கந்தாய இரசீதுகளை ஒப்படைக்க முடியும். சொத்து ஆரம்பத்தில் ராசப்ப கவுண்டருக்கு பாத்தியம். இராசப்பகவுண்டரின் மகள் முத்தாயாள் இறந்துவிட்டார். 15 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். முத்தாயாளுக்கு 3 மகன் 1 பெண் உள்ளார் என்றால் சரிதான். முத்தாயாளின் மகள் பெயர் செல்லம்மாள் . முத்தாயாள் என் அப்பாவின் சகோதரி எனக்கு அத்தையாவார். இந்த வழக்கில் முத்தாயாளின் பெண் மகளை சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர் கவுண்டம்பாளையத்தில் குடியிருந்து வருகிறார். முத்தாயாளின் ஒரு மகன் பழனிசாமி காலமாகிவிட்டார் என்றால் சரிதான். பழனிசாமியின் மனைவி பெயர் கண்ணம்மாள் என்றால் சரிதான். பழனிசாமியின் மகள் பெயர் சந்திரலேகா என்றால் சரிதான். இந்த வழக்கில் கண்ணம்மாளையும், சந்திரலேகாவையும் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்கள் என் அத்தை முத்தாயாளின் வாரிசுகள் என்றால் சரிதான். வழக்கு சொத்து 3 இடங்களில் உள்ளது. அயிட்டம் A சொத்தை குருவாய் தோட்டம் என்று சொல்வார்கள் என்றால் சரிதான் அது இரண்டு பிரிவாக உள்ளது. என் தகப்பனார் மற்ற பாகஸ்தர்களுடன் எழுத்து மூலமான பாகம் செய்துகொள்ளவில்லை என்றால் சரிதான். 6, 7 பாகஸ்தர்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி குருவாய் தோட்டத்தில் பொதுவில் 1/8 பாகம் என்று குறிப்பிட்டுள்ளனே் என்றால் சரிதான். மற்ற 7 பாகஸ்தர்களையும் இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான் அவர்களுக்கு அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். இன்னொரு பூமி கொண்டாரெட்டி காடு என்றால் சரிதான் அதில 6,7 நபர்களுக்கு பாகம் என்றால் சரிதான். மற்ற பாகஸ்தர்களுடன் என் தகப்பனாருக்கு எழுத்துமூலமான பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றால் சரிதான் மற்ற பாகஸ்தர்களையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். துண்டுக்காடு என்று குறிப்பிட்டுள்ளேன் அதன் சர்வே எண் தெரியாது. அதிலும் 6, 7 நபர்களுக்கு பாகம் உள்ளது என்றால் சரிதான். அதில் எழுத்து மூலமான பாகக்கறார் செய்யப்படவில்லை என்றால் சரிதான் மற்ற பகாஸ்தர்களை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். இதே வழக்கு சொத்து சம்பந்தமாக ஈரோட்டில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் வழக்கு தள்ளுபடி

ஆகிவிட்டது என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி ஆகிவிட்ட நிலையில் அதே பரிகாரம் கோரி இந்த வழக்கை நான் தாக்கல் செய்வது முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நான் சுவாதீனத்தில் இல்லாததால் நான் அதிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல. நான் கூட்டு சுவாதீனத்தில் இருப்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை எனறால் சரியல்ல. 3ம் பிரதிவாதி காளியப்ப கவுண்டர் பெயருக்கு என் தாயார், சகோதரர் மற்றும் சகோதரி கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான் ஆனால் அது செல்லாது. மேற்படி காளியப்ப கவுண்டரின் வாரிசுகள் கிரையம் பெற்ற சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி காளியப்ப கவுண்டர் கிரையம் பெற்ற பத்திரத்தை தாக்கல் செய்திருக்கிறேன். மேற்படி ஆவணம் நடைமுறைகைக்கு வந்துவிட்டது என்று தெரிந்துகொண்டேன். மேற்படி பத்திரத்தின் அடிப்படையில் பட்டா மாறுதல் ஏற்பட்டுவிட்டது என்றால் சரிதான் அவர்கள் கந்தாயம் கட்டி வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தை ரத்து செய்ய பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பகுதி பாகப்பிரிவினை கோருவதால் அது சட்டப்படி நிலைக்கதக்கல்ல என்றால் சரியல்ல. அவசியமான தரப்பினர்களை சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல. சொத்து விவரத்தில் நான்கு எல்லைகளை காட்டவில்லை என்றால் பாகப்பிரிவினை ஆகாத கறார் ஆக சொத்தில் எல்லகைளை காண்பிக்க இயலாது. வழக்கில் சொத்து விவரம் தவறானது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- ரேவதி

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

K SURESH KUMAR

Digitally signed by K SURESH KUMAR
Date: 2022.07.16 16:51:58 +0530

Subordinate Judge,
Avinashi.